# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

## CALENDAR CASE NO. 91/2018

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - திரு.வேடியப்பன் **PW**-48 தொழில் -

த/க பெயர் - பெருமாள் வயது - 48

கிராமம் -

தாலுக்கா -

**(எதிரி 30 ஆஜர் )**

**(எதிரிகள் 2 முதல் 4, 6 முதல் 26, 28 எதிரிகள் ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:-**

நான் தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுகாவில் முத்தானூரில் குடியிருந்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த சுரேஷ்குமார், அருண், பூபேஷ், அசோகன் மற்றும் குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் உள்ளூர்காரர்கள் என்ற வகையில் அவர்கள் டிஎன்பிஎஸ்சி தேர்வுக்கு படித்து வந்தார்கள் என்று எனக்கு தெரியும். நான் முத்தான் ஊரில் ஒரு நாள் வேலைக்கு செல்ல நின்று

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2025.09.18 18:12:57 +0530

கொண்டிருந்த போது போலீஸ் வந்து என்னிடம் மேற்படி நபர்கள் எங்கள் ஊர் காரர்களா என்று கேட்டார்கள், நான் ஆமாம் என்று சொன்னேன். அப்போது அவர்கள் டிஎன்பிஎஸ்சி வினாத்தாள் பணத்துக்காக வழக்கு சம்பந்தமாக விசாரிக்க வந்திருப்பதாக சொன்னார்கள். இந்த வழக்கை பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. மேற்படி நபர்கள் என் ஊர் காரர்களா என்று கேட்டு நான் ஆமாம் என்று சொன்னேன். அதற்காக ஒரு கையொப்பம் வாங்கினார்கள்

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கருதப்படுகிறது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸ் என்னை விசாரிக்கும் போது கடந்த 10.08.2012 ஆம் தேதி நான் அரூர் முத்தூட் பைனான்ஸ் முன்பு இருந்தபோது சுரேஷ்குமார், அருண் என்பவரும் மேற்படி முத்தூட் பைனான்ஸ் முன்பு நின்று கொண்டிருந்தவர்களை பார்த்து அவர்களிடம் என்னவென்று விசாரித்தபோது, சுரேஷ்குமார் என்னிடம் டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வுக்கு முன்பாக மேற்படி தேர்வுக்கான வினாத்தாள்கள் திருவண்ணாமலையில் கொடுப்பதாகவும் அதற்கு பணம் தேவைப்படுவதால் அருணின் நகையை முத்தூட் பைனான்ஸில் அடகு வைத்து பணம் பெறுவதற்காக அங்கு இருப்பதாக சொன்னார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றும், தற்போது அதை மறுத்து எதிரிகளுக்கு ஆதரவாக எதிரிகள் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2025.09.18 18:13:04 +0530